
வரலாறு
தரம் - 10
அலகு - 03
இலங்கையின் அரசியல் அதிகார வளர்ச்சி
திருமதி J. கோபிகா (B.A, Dip in teach)
KG/DEHI/DEHIOWITA T.M.V.
DEHIOWITA.

# 10.3 இலங்கையின் அரசியல் அதிகார வளர்ச்சி

## 3.1 அரசுக்கு முற்பட்ட காலம்

❖ **இல்லத்தலைவன் / குடும்பத்தலைவன் (குர்ஹபதி/கஹபதி/கிருகபதி)**

- கிராமத்தின் பொதுப் பணிகளில் ஒவ்வொரு குடும்பத்தையும் பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக முன்வந்தவர்கள்.
- குடும்பம் என்பது புராதன காலத்தில் குலம் என்ற பெயரால் குறிப்பிடப்பட்டுள்ளது.
- கி.மு 250ம் ஆண்டை அண்மிய காலத்திற்குரிய அநுராதபுரத்தை சேர்ந்த பெரியப்புளியங்குளம் எனும் இடத்தில் கண்டுப்பிடிக்கப்பட்டுள்ள கல்வெட்டில் "**கஹபதி**" எனப்படும் குடும்பத்தலைவன் பற்றி பின்வருமாறு கூறப்படுகிறது.

**"சுமணவின் குடும்பத்தைச் சேர்ந்த உலோகக் கைத்தொழில் மேந்கொண்டிருந்த இல்லத்தலைவன் ஒருவன் பிக்குமாரின் சேமநலன் கருதி குகையொன்றை சுத்தம் செய்து தானமளித்துள்ளான்."**

## ❖ கிராமத் தலைவன் (கமிக /கிராமிக)

- ஒவ்வொரு கிராமத்தையும் பிரதிநிதித்துவப்படுத்திய நபர்.
- இல்லத் தலைவர்களின் விருப்பத்துடன் கிராமத்தில் வாழ்ந்த செல்வமும், பலமும் கொண்ட ஒருவர் கிராமத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.
- அடுத்தவர்களுக்கு உதவக்கூடிய அளவுக்கு சொத்துக்களையுடைய செல்வந்தர்களாக விளங்கினர்.
- **உ+ம் :-** புராதன கிராமம் ஒன்றில் வாழும் ஏழைக் குடியானவன் அடுத்த போகத்தில் தருவதாகக் கூறிய வாக்குறுதியின் பேரில் கமிகவிடம் நெல் மூடை ஒன்றைக் கடனாகப் பெற்ற செய்தி 'ஜாதக அட்டகதா' என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- கிராமத்து இல்லத் தலைவர்களில் இருந்து தெரிவு செய்யப்படுபவரே **'கமிக'** என **புத்தகோச தேரர் 'சமந்த பாசதிகா'** என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.
- இவர்கள் ஒருவரோடொருவர் நல்லுறவுடன் செயற்பட்டமையினால் கிராமங்களில் சமாதான சகவாழ்வு நிலவியது என்பதற்கான ஆதாரம் சிதுல்பவ்வ விகாரை கற்குகையில் காணப்படுகிறது. **"கமிக சிவ, கமிக சுமண, கமிக சதன"** போன்ற **சிதுல்பவ்வையை** அண்டிய கிராமத் தலைவர்கள் கற்குகையை சுத்தமாக்கி பிக்குகளுக்கு தானமளித்தமை.

## ❖ கமிகவின் பணிகள்

- ❑ கிராமப் பொது நிகழ்வுகளுக்குத் தலைமை தாங்கல்
- ❑ கிராமக் குளத்தை நிர்வகித்தல்
- ❑கிராமத்தவர்களிடையே ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்த்தல்
- ❑ கிராமத்தவர்களிடையே நல்லுறவை வளர்த்தல்
- ❑ குளத்திலிருந்து நீரை விநியோகித்தல்

## ❖ பிரதேசத் தலைவன் ( பருமக )

- ☺ ஒரு குளத் தொகுதியைச் சேர்ந்த அனைத்துக் கிராமங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தியவர்.
- ☺ பிரதேசத்தின் நிர்வாக அமைப்பைக் கொண்டிருந்தார் என **கண்டலாம** என்ற கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- ☺ குகை ஒன்றை பிக்குகளுக்கு தானமளித்த பருமக **'தொட்டபோஜக'** (படகுத் துறையை நிர்வகிப்பவர்) என்ற பெயரால் குறிப்பிடப்பட்டுள்ளார்.
- ☺ பிரதேச நிர்வாகத்தில் ஈடுபட்ட பெண்கள் **பருமகலு** என அழைக்கப்பட்டனர்.
- ☺ துட்டகைமுனு மன்னன் பருமகமாரின் ஒத்துழைப்பைப் பெற்று நாட்டின் அதிகாரத்தை மையப்படுத்தினான். (**புஸ்ஸதேவ, வேலுசுமண, தேரபுத்தாபய** )

## ❖ பருமகவின் பணிகள்

- பிரதேசத்தை நிர்வகித்தல்.
- குளத் தொகுதியை நிர்வகித்தல்.
- வரி வசூலித்தல்.
- பல கிராமப் பிரஜைகளினதும் நலனுக்காக தீர்மானங்களை மேற்கொள்ளல்.

## ❖ குளத் தொகுதி

- நீரைத் தேக்கி வைக்கும் பொருட்டு அருகருகே காணப்படும் பல குளங்களைக் கால்வாய்கள் மூலம் ஒன்றிணைத்து உருவாக்கப்பட்டதே குளத் தொகுதி ஆகும்.
- ஒரு குளத் தொகுதியைக் குறிப்பிடுவதற்கு ‘**வெவ்பிரபாதனய**’ என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளார்கள்.
- எனினும் உலர் வலய மக்கள் குளத் தொகுதியைக் குறிப்பிடுவதற்கு ‘**எல்லங்காவ**’ என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளனர்.
- ஒரு குளத் தொகுதியைச் சேர்ந்த அனைத்துக் கிராமங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வண்ணம் பருமகமார் செயற்பட்டுள்ளனர்.
- பிரதேச நிர்வாகத்தில் ஈடுபட்ட பெண்கள் ‘**பருமகலு**’ என குறிப்பிடப்பட்டுள்ளனர்.

## ❖ குளத் தொகுதி உருவாக்கப்பட்டதன் நோக்கங்கள்

- ✓ மேட்டுப்பாங்கான நிலத்தில் அமைந்துள்ள குளம் மழை நீரால் நிரம்பும்போது வெளியேறும் மேலதிக நீரைத் தாழ்நிலப் பகுதியில் அமைந்துள்ள குளம் ஒன்றிற்குத் திருப்பி நீரைப் பாதுகாத்தல்.

- ✓இரு குளங்களுக்கிடையில் உள்ள கால்வாயில் எந்நேரமும் நீரைப் பாயவிடுவதன் மூலம் அதன் இருபக்க நிலங்களினதும் ஈரத்தன்மையைப் பாதுகாத்தல்.

# ❖ அரசின் வளர்ச்சி

## ○பண்டுகாபயன் (கி.மு 377 – 307 )





- பிராந்திய ஆட்சியாளர்கள் பலருடன் சண்டையிட்டு அப்பிரதேசங்களை கைப்பற்றி ஒரு நிர்வாகத்தின் கீழ் கொண்டு வந்தமை
- முறையான ஆட்சியை நிறுவிய முதல் மன்னன்
- இந்நாட்டை ஆண்ட முதல் மன்னன்
- தனது ஆட்சியின் மத்திய நிலையமாக அநுராதபுரத்தைத் தெரிவு செய்தமை
- முதற்தடவையாக நகர நிர்மாண நடவடிக்கைகளை மேற்கொண்டமை
- கிராமங்களுக்கு எல்லைகளை வகுத்தமை
- இலங்கை வரலாற்றில் குறிப்பிடப்படும் முதலாவது குளமான அபயவாவியை (பசவக்குளம்) அமைத்தமை. மேலும் காமினி வாவி, ஜயவாவி போன்றவற்றையும் அமைத்தமை
- முதன்முறையாக வைத்தியசாலைகளை அமைத்தமை
- நகரங்களை நிர்வகிக்க நகரகுத்திகன் என்ற அலுவலரை நியமித்தமை
- பண்புள்ள சீரான சமூகத்தை கட்டியெழுப்பும் வகையில் ஆலயங்களை அமைத்தமை
- 70 வருடங்கள் சிறப்பாக நாட்டை ஆட்சி செய்தமை

## ❖ தேவநம்பியதீசன் (கி.மு 274 – 247)

- ✓ இலங்கையில் பௌத்த மதம் அறிமுகப்படுத்தப்பட்டமை.
- ✓ இலங்கை- இந்திய தொடர்பு வளர்ச்சியடைந்தமை.
- ✓ முடி சூடும் மரபு ஏற்பட்டமை. (இரு தடவை முடிசூடிக் கொண்டமை)
- ✓ பொருளாதார விருத்தி கருதி திசாவாவி,வலஸ்வாவி போன்றவற்றை அமைத்தமை.
- ✓ மௌரியக் கட்டடக்கலையை அறிமுகம் செய்தமை.
- ✓ இலங்கையின் முதலாவது தாதுகோபமான தூபராமவை அமைத்தமை.
- ✓ சகல பிரதேசத் தலைவர்களிடையே நல்லுறவை வளர்க்கும் தேவையை உணர்ந்து செயற்பட்டமை.





## 3.2 அரச கோட்பாடு

❖ **அரசன் மக்களுக்கு ஆற்றவேண்டிய முக்கிய பணிகள்**

✓ நாட்டு மக்களுக்குப் பாதுகாப்பை வழங்கல்.
✓ நாட்டை பொருளாதார ரீதியில் முன்னேற்றல்.
✓ பிரஜைகளிடையே ஆன்மீக வளர்ச்சியை ஏற்படுத்தல்.

❖ **அரசர்கள் பயன்படுத்திய எண்ணக்கருக்கள்**

➢ ஆண்டவன்
➢ போதிசத்துவர்
➢ மலையின் அரசன் ( பர்வதராஜா )
➢ சக்கரவர்த்தி

- குட்டகண்ணஅபய மன்னன் - **நரேஸ்வர(மனிதர்களின் கடவுள் )தம்புள்ள விகாரைக் கல்வெட்டு**
- முதலாம் காசியப்பன் - **குபேரக் கடவுள் அலகபய மகாராஜா (இந்திரலோகங்களின் மகாராஜா )**
- நிஸங்கமல்லன் - **சக்கரவர்த்தி (முழு உலகிற்கும் அரசன்) காலிங்க சக்கரவர்த்திப் பெருமான்**
- மகாசேனன் - **மின்னேரியக் கடவுள்**

## ❖ அரசுரிமை மாற்றம்

- **தந்தைக்குப் பின் மகன்**

✓ காவந்தீசனுக்குப் பின் துட்டகைமுனு

✓ வசபனுக்குப் பின் வங்க நாசிக்க திஸ்ஸ

- **சகோதரனிடமிருந்து சகோதரன்**

✓ தேவநம்பிய தீசனுக்குப் பின் உத்திய

✓ துட்டகைமுனுவுக்குப் பின் சத்தாதிஸ்ஸ

- **அரசனின் மனைவியின் சகோதரனுக்கு மற்றும் அரசனின் சகோதரியின் புத்திரனுக்கு**

✓ ஸ்ரீ வீரபராக்கிரம நரேந்திர சிங்கனுக்குப் பின் ஸ்ரீ விஜயராஜசிங்கன்

❖ அரசனின் தலைமையின் கீழ் நிர்வாகம் செயற்பட்ட விதம்.

| | |
|---|---|
| மகாராஜா | மபுறுமுகா |
| தலைமை அமைச்சர் | மஹமத |
| அமைச்சர்கள் | அமெத |
| பொருளாளர் | படகரிக |
| உணவுச்சாலை அதிகாரி | பதகு |
| வழக்கங்கள் மரபு முறைகள் தொடர்பான அதிகாரி | கொதுறு கேனா |
| நகர பரிபாலகர் | நகர குத்திக |
| நகர கட்டட நிர்மாணி | நகர வடிக |
| குதிரைப் பிரிவின் தலைவர் | அச அதெக |
| யானைப் பிரிவின் தலைவர் | ஹதி அதெக |
| நாட்டியப் பிரிவின் தலைவர் | நட அதெக |
| காசு அச்சிடும் பிரிவின் தலைவர் | ரூப அதெக |
| வர்த்தக நடவடிக்கைக்கான தலைவர் | பன அதெக |

# 3.3 இந்நாட்டை ஆண்ட முக்கியமான மன்னர்கள்

## ❖ துட்டகைமுனு மன்னன் (காமினி அபய) (கி.மு 161- 137 )

### அரசியல் பணிகள்

- இலங்கைத் தீவை ஒன்றுபடுத்திய முதல் அரசன்.
- பரவலாக்கப்பட்ட அதிகாரத்தை அனுபவித்து வந்த பருமகமாரை மத்தியமயமாக்கப்பட்ட அதிகாரத்திற்கு இணைத்துக் கொள்வதன் மூலம் ஏக அரச நிர்வாகத்தை ஏற்படுத்தியமை.
- பல்லூகனுடைய தலைமையில் இந்தியாவிலிருந்து வந்த படையுடன் போரிட்டு வெற்றி கொண்டமை.
- மாந்தை துறைமுகத்தை எல்லாளனிடமிருந்து மீட்டமை.
- இந்நாட்டு வரலாற்றில் முதலாவது முறையான யுத்த செயற்பாட்டிற்கு தலைமைத்துவத்தை வழங்கியமை.
- நாட்டிற்கான பொதுக் கொள்கைகளை முன்வைத்து அரசியல் செயற்பாட்டை மேற்கொண்டமை.






## ❖ பொருளாதாரப் பணிகள்

- மக்களின் நலநோன்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டமை.
- ருவான்வெலிசாய கட்டப்பட்ட வேளையில் அதன் நாற்றிசை வாயில்களிலும் தானமளிக்க ஏற்பாடு செய்தமை.
- ருவான்வெலிசாய நிர்மாண நடவடிக்கைகளில் ஈடுபட்ட அனைவருக்கும் சம்பளம் வழங்க நடவடிக்கை எடுத்தமை.
- கொத்மலையில் தங்கியிருந்த காலத்தில் பயிர் செய்து உயர் விளைச்சலைப் பெற்றமை.
- தம்பி தீசனை திகாமடுல்ல பிரதேசத்திற்கு அனுப்பி அபிவிருத்தி செய்தமை.
- மகியங்கணையிலுள்ள சொரபொரவாவியை அமைத்தமை.
- உள்நாட்டு வியாபாரத்தை மேம்படுத்த ஆதரவு வழங்கியமை.
- கைத்தொழிலில் தேர்ச்சி பெற்ற வல்லுனர்கள் காணப்பட்டமை.

❖ **பௌத்த மதப்பணிகள்**

- 89 சமயக் கட்டிடங்கள் அமைக்கப்பட்டமை.
- (ருவான்வெலிசாயஇ லோகமகாபாயஇ மிரிசுவெட்டிய )
- வெசாக் விழாவை இலங்கையில் அறிமுகப்படுத்தியமை.
- மகியங்கணைத் தூபியை புணரமைத்தமை.
- மகாவிகாரைக்கு அணுசரணை வழங்கியமை.



**துட்டகைமுனுவின் தளபதிகளுள் பருமகராக விளங்கியவர்கள்**

- ✓ வேலுசுமண
- ✓ புஸ்ஸதேவ
- ✓ தேரபுத்தாபய
- ✓ நந்திமித்ர


## ❖ வசப மன்னன் ( கி.பி 65 – 109 )

- ✍இலம்பகர்ண வம்சத்தின் முதல் ஆட்சியாளன்.
- ✍இவனது ஆட்சி இலங்கை முழுவதிலும் பரவியிருந்தமைக்கு கல்வெட்டுக்கள் சான்றுகளாக அமைகின்றன.
- ✓வடக்கில் :- யாழ்ப்பாணம்
- ✓தெற்கில் :- சிதுல்பவ்வ, திஸ்ஸமகாராம
- ✓கிழக்கில் :- மட்டக்களப்பு
- ✓மேற்கில் :- குருநாகல்
- ✍நாட்டை நிர்வாக அலகுகளாக பிரித்து ஆட்சி செய்தமை.
- ✓யாழ்ப்பாணம் - ரிஷிகிரி
- ✍அரச வரி அறவீடு முறைப்படுத்தப்பட்டமை.
- ✍முதன்முதலாக நாட்டில் பாரிய குளங்களை அமைத்தமை (மகாவிலாச்சிய, மானாகட்டிய )
- ✍புராதன காலத்தில் அமைக்கப்பட்ட பிரமாண்டமான கால்வாயாக கருதப்படும் எலஹர (ஆளிசாரா) கால்வாயை அமைத்தான்.
- ✍தூபராம தூபிக்கு வட்டதாமனையையும் இசுறுமுனிய விகாரையில் போயாமனையையும் அமைத்து பிக்குமாருக்கு வழங்கினான்.
- ✍திஸ்ஸமகாராமையில் உள்ள சிதுல்பவ்வ விகாரைக்கு தூபியை அமைப்பித்தான்.
- ✍பல விகாரைகளைப் புணரமைத்தான்

## ❖ முதலாம் விஜயபாகு மன்னன் (கி.பி 1055 – 1110 ) (கீர்த்தி குமாரன் / மகாவிஜயபாகு)

### அரசியல் பணிகள்

- ✓ புத்தராஜனின் உதவியுடன் கேசதாது காசியப்பனைத் தோற்கடித்து கி.பி 1055ல் கதிர்காமத்தை நிர்வாக மையமாகக் கொண்டு 1ம் விஜயபாகு என்ற பெயருடன் உருகுணையின் ஆட்சியாளனானான்.
- ✓ கி.பி 1017 -1070 வரை நிலவிய சோழர் ஆட்சியிலிருந்து பொலநறுவையைக் கைப்பற்றியமை.
- ✓ முழு இலங்கையையும் ஒன்றுபடுத்தி ஆண்டமை.
- ✓ பொலநறுவை யுகத்தின் முதலாவது சிங்கள அரசன்.
- ✓ ஏப்பாஇ மாப்பா பதவிகள் ஏற்படுத்தப்பட்டு பாரம்பரிய முறையிலான நிர்வாகம் மீண்டும் உருவாக்கப்பட்டமை.
- ✓ பொலநறுவைக்கு விஜயராஜபுரம் எனப் பெயரிட்டு இராச்சியத்தை அமைத்தான்.


Mahathiltha
Anuradhapura
Polonnaruwa
Mahiyangana
Walawe
River
Magama
Mahanagakula


alamy

# பொருளாதாரப் பணிகள்

- பல குளங்கள் புணரமைக்கப்பட்டமை. (மகாகல்கடவல, மகாகணதராவ, நாச்சதுவ வாவி )
- எலஹறக் கால்வாயைப் புணரமைத்து மின்னேரியா, கவுடுலு, கந்தளாய் போன்ற நீர்ப்பாசனக் கட்டமைப்புக்களை பழைய நிலைக்கு கொண்டு வந்தான்.
- பர்மாவுடன் தொடர்புகளைப் பேணியதால் பர்மிய மன்னன் கப்பல் நிறைய வியாபாரப் பொருட்களை அனுப்பினான்.

# பௌத்த மதப் பணிகள்

- பர்மாவிலிருந்து பிக்குகளை வரவழைத்து உபசம்பதா சடங்கை நடத்தியமை.
- பொலநறுவையில் மூன்றடுக்கு தலதாமாளிகையை அமைத்தமை.
- பொலநறுவை தலதாமாளிகையின் பாதுகாப்பிற்காக வேளைக்காரப் படையை நியமித்தமை.
- சிவனொளிபாதமலைக்குச் செல்லும் பாதையைச் சீரமைத்து சிவனொளிபாதமலைக்கு கிராமங்களை வழங்கியமை.
- அநுராதபுரத்திலும் உருகுணையிலும் விகாரைகளைப் புணரமைத்தமை.

# வெளிநாட்டுத் தொடர்புகள்

- கலிங்க தேசத்துடனும் பாண்டிய தேசத்துடனும் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டான்.
- திரிலோகசுந்தரி என்ற கலிங்க இளவரசியை திருமணம் செய்து கொண்டான்.
- தனது சகோதரியான மித்தா இளவரசியை பாண்டிய இளவரசனுக்கு திருமணம் செய்து கொடுத்தான்.
- தூதர்களை அனுப்பி பரிசுப்பண்டங்களை வழங்கி மேலை சாளுக்கிய அரச வம்சத்துடன் நட்புறவை வளர்த்தார்.

# முக்கியமான மேலதிக விடயங்கள்

- ✓ துட்டகைமுனு மன்னன் காலத்தில் இந்து சமுத்திர வியாபார நடவடிக்கைகளில் பேரளவு இலாபத்தை ஈட்டிவந்த சர்வதேச துறைமுகமாக விளங்கியது மாந்தை (மாதொட) துறைமுகமாகும்.
- ✓ இந்நாட்டின் அரசியல் அதிகாரத்தை முறையான விதத்தில் உருவாக்குவதில் மிகவும் முக்கியமான பங்களிப்பை வழங்கியவன் துட்டகைமுனு ஆவான்
- ✓ பன்முகப்படுத்தப்பட்டிருந்த அதிகாரம் மத்தியமயப்படுத்தப்பட ஆரம்பித்தது துட்டகைமுனு மன்னன் காலத்திலும், அந்நடவடிக்கை பூரணத்துவமடைந்தது வசப மன்னன் காலத்திலும் இடம்பெற்றதாகும்
- ✓ வசப மன்னன் காலத்தில் யாழ்குடாநாடு நாகதீப (நகதிவ) என அழைக்கப்பட்டதாக வல்லிபுரம் பொற்சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- ✓ முதலாம் விஜயபாகு பொலநறுவையைத் தலைநகரமாகத் தெரிவு செய்தமையில் செல்வாக்குச் செலுத்திய காரணி இந்து சமுத்திர வியாபாரம் கிழக்கை நோக்கி நகர்ந்ததாலாகும்.

1. படத்திலுள்ளதைப் பெயரிடுக.

**கல்லறை மயானம்**



2. இதன் சிதைவுகள் கண்டெடுக்கப்பட்ட இடம் எது?

**தம்புள்ள இப்பன்கட்டுவ**

3. இது எந்தக் காலகட்டத்துக்குரியது?

**கி.மு 700-450 (முன் வரலாற்றுக் காலம்)**

4. இதனைப் பயன்படுத்திய சமூகத்தினர் யார்?

**பருமக (பிரபுக்கள்)**

5. இதன் மூலம் வெளிப்படுத்தப்படுவது யாது?

**புராதன கால மரணசசடங்கு முறை**

1. படத்திலுள்ளதைப் பெயரிடுக.

**களிமண் முத்திரை**

2. இது எங்கு கண்டெடுக்கப்பட்டது?

**திஸ்ஸமகாராம**

3. இவை யாரால் பயன்படுத்தப்பட்டது?

**அரச அதிகாரிகள்**

4. இது எப் பொருளால் ஆக்கப்பட்டது?

**களிமண்**



1. படத்திலுள்ளதைப் பெயரிடுக.

**களிமண் முத்திரை**

2. இது எங்கு கண்டெடுக்கப்பட்டது?

**மாகம**

3. இதனைப் பயன்படுத்திய ஆட்சியாளர்கள் யார்?

**உருகுணை ஆட்சியாளர்கள்**

4. இங்கு பயன்படுத்தப்பட்ட மூலப்பொருள் எது?

**களிமண்**

5. இதில் காணப்படும் சிறப்பம்சம் யாது?

**உருகுணை ஆட்சியாளர்களினால் உபயோகிக்கப்பட்ட குறியீகள் பலவும் இம்முத்திரையில்காணப்படுகின்றமை**





1. படத்திலுள்ள ஆட்சியாளர் யார்?

   **பாதிகாபய மன்னன்**

2. இச் சிலை எங்கு காணப்படுகிறது?

   **அநுராதபுரத்தில் ருவான்வெலிசாய முற்றத்தில்**

3. இச் சிலை அங்கு காணப்படுவதற்கான காரணம் யாது?

   **ருவான்வெலிசாயவிற்கு காணிக்கை வழங்கியமை**

4. இவர் எந்த இடத்திலிருந்து கண்ணாடி மணிகளைப் பெற்றார்?

   **உரோம்**

5. இவர் எந்த இராசதானி காலத்துக்குரியவர்?

   **அநுராதபுரம்**



1. படத்திலுள்ளதைப் பெயரிடுக.

   **மணிமாலை**

2. இது கண்டெடுக்கப்பட்ட இடம் எது?

   **இப்பன்கட்டுவ**

3. இது எந்தக் காலப்பகுதிக்குரியது?

   **கி.மு 700-450 (முன் வரலாற்றுக் காலம்)**

4. இதன் முக்கியத்துவம் யாது?

   ✓**வளர்ச்சியடைந்து வந்த பிரபுத்துவக் குடும்பங்களின் ஆடம்பர வாழ்க்கையைப் பிரதிபலிக்கிறது.**

   ✓**இம்மணிமாலையின் சில பகுதிகள் இறக்குமதி செய்யப்பட்டவை.**

# நன்றி

